வணிகக்கல்வி

பணம் மற்றும் நிதி நிறுவனங்கள்



e தக்சலாவ™
கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி 7.0 **வணிகங்களின் வாழ்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் பணம் மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பினை மதிப்பார்.**

தேர்ச்சி மட்டம் 7.1 **கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பணப்பாவனையின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவார்.**

பணம் (Money)

பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தின் போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு

உதாரணம்:

1. **ஆதிகாலம்**
   சிப்பி , முத்து , மிருகத்தோல், யானைத்தந்தம் , உப்பு

2. **நவீனகாலம்**
   தாள் உலோக நாணயங்கள் , காசோலை , கடன் அட்டைகள் , வரவு அட்டைகள்.

பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்திற்கு பணத்தின் அவசியம்.

⇒ பண்டைய காலத்தில் பணமின்றி இடம்பெற்ற நேரடிப் பரிமாற்றம் பண்டமாற்று எனப்பட்டது.

⇒ பண்டமாற்றில் பல பிரச்சினைகள் காணப்பட்டன.

⇒ இதனால் பண்டமாற்றுக்குப் பதிலாக அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொதுவான ஊடகமொன்றின் தேவைப்பாடு உணரப்பட்டது.


⇒ அப்பரிமாற்று ஊடகமே பணம் எனக் கொள்ளப்பட்டது.

⇒ ஆகவே, பரிமாற்றத்திற்குப் பணம் மிக அவசியமானது என்பது தெளிவாகின்றது.

தொகுப்பு :- திருமதி.சு.நிருபன் ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா தெற்கு.

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk









தொகுப்பு :- திருமதி.சு.நிருபன் ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா தெற்கு.

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



பணத்தின் தொழிற்பாடுகள் / கருமங்கள்

பரிமாற்று ஊடகமொன்றாகச் செயற்படல்.

பொருட்கள் சேவைகள் பரிமாற்றத்தின் போது இடை நடுவரொருவராகச் செயற்படுவதாகும். அதாவது பொருட்கள் சேவைகளின் பெறுமதியானது பணத்தின் மூலம் செலுத்தப்படுதலை இது குறிக்கும்.

உ+ம்- மடிக் கணினியொன்றை ரூ80000 ற்குக் கொள்வனவு செய்தல்

பெறுமதிகளை அளவிடும் அளவீட்டுக் கருவியொன்றாகக் கருமமாற்றுதல்

பொருட்கள் சேவைகளின் பெறுமதிகளை அளவிடுவதற்காக பணம் பயன்படுத்தப்படுகின்றது.

உ+ம்- 1m சீருடைத் துணியின்

பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமொன்றாகக் கருமமாற்றல்

எதிர்வரும் திகதியொன்றில் பணத்தைச் செலுத்தும் நிபந்தனையின் கீழ்பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்ய முடியுமாயிருத்தலை இது குறிக்கும்

உ+ம்- 2018 தை மாதத்தில் ரூ.500 ற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருளுக்கு பங்குனி மாதத்தில் பணத்தைச் செலுத்துவதற்கு ஒப்பந்தம் செய்தல்.

பெறுமானத் திரட்டாக கருமமாற்றல்

நாணயம், நாணயத் தாள்களை தேய்வடையாமலும், காலங் கடந்தவையாதலின்றியும் சேகரித்து வைத்து எதிர்காலத்தில் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.

உ+ம்- தாள் நாணயங்களாக ரூ.5000 ஐச் சேமித்தல்.

Copyright moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.சு.நிருபன் ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா தெற்கு.

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பணத்தின் வகைப்படுத்தல் (Types Of Money)

பணத்தின் வகைகள்	விடயங்கள்	உதாரணங்கள்
சட்டப்பணம் (Currency)	⇒ திறைசேரி அதிகாரியின் உத்தரவின் கீழ் வெளியிடப்படுகின்ற நாணயம், நாணயத் தாள்கள் சட்டப்பணமாகும். ⇒ இவை 100% திரவத்தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பணமாகும்.	குற்றி நாணயங்களும் தாள் நாணயங்களும்
வங்கிப் பணம் (Bank Money)	⇒ வணிக வங்கிகளில் பேணப்படுகின்ற கேள்வி வைப்புக்கள் / நடைமுறை வைப்புக்களில் காணப்படுகின்ற மீதிகள் இவையாகும். ⇒ இப்பணமானது காசோலைகள் மூலமே கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றது.	வணிக வங்கிகளில் பேணப்படுகின்ற நடைமுறை வைப்புக்கள்.
அண்மிய பணம் (Near Money)	⇒ 100% திரவத்தன்மை அற்றதும் பெறுமதிக்கு ஏற்ப பெறுமானத் திரட்டுக் கருமங்களை நிறைவேற்றக் கூடியதும் இலகுவாகப் பணமாக மாற்றக்கூடியதுமான சொத்துக்கள் இவையாகும்.	வணிக வங்கிகளில் காணப்படுகின்ற பெறுமதிகளின் நிலையான சேமிப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், வணிகப் பத்திரங்கள்.
இலத்திரனியல் பணம் (E– Money)	⇒ தகவல் மற்றும் டிஜிடல் (எண்மான) தொழில்நுட்பம் என்பவற்றின் பெறுபேறாக உருவாக்கப்பட்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின் போது கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றதுமான பணம் இதுவாகும்.	வரவு அட்டை, கடன் அட்டை, முற்பணக் கொடுப்பனவு அட்டைகள்.

இலத்திரனியல் பணம் (E– Money)

⇒ **வரவு அட்டை** (Debit Card)

வங்கிக் கணக்கில் பணமுள்ளவர்களுக்கு மாத்திரம் பெற்றுக் கொள்ளக்கூடிய அட்டையாகும்.

⇒ **கடன் அட்டை** (Credit Card)

வங்கிக் கணக்கொன்று இல்லாதுவிடினும் கடனாகப் பொருள்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அட்டை இதுவாகும்.

⇒ **முற்பணக் கொடுப்பனவு அட்டைகள்** (Prepaid Card)

முன்கூட்டியே பணத்தினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளக்கூடிய அட்டை இதுவாகும்.

தொகுப்பு :- திருமதி.சு.நிருபன் ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா தெற்கு.

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



இலத்திரனியல் பண அட்டைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்காக வழங்கப்படும் வசதிகள்.

1) தன்னியக்க டெலர் இயந்திரம் (Automatic Teller Machine / ATM Mechine)

வரையறுக்கப்பட்ட வங்கி சேவைகளை டெலர் (ரெலர்) அட்டைகளைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரம் இதுவாகும்.

2) தன்னியக்க வைப்பு இயந்திரம் (Automatic Deposits Machine / ADM Machine)

⇒ இவை பார்ப்பதற்கு ATM இயந்திரம் போல காட்சியளிக்கும்.

⇒ இவ்வியந்திரத்தை முன்னணி வங்கிகளின் கிளைகளில் காண முடியும்.

⇒ இவ்வியந்திரத்தின் தொழிற்பாடு ATM இயந்திரத்திற்கு முற்றாக மாறுபட்டதாகும்.

⇒ எந்தவொரு வங்கியின் கணக்கிற்கும் இவ்வியந்திரத்தைப் பயன்படுத்தி காசு வைப்புக்களை செய்ய முடியும்.

3) காசோலை வைப்பு இயந்திரம் (Cheque Deposits Machine / CDM Machine)

ATM அட்டையினையோ அல்லது வங்கிக் கணக்குப் புத்தகங்களையோ கொண்டிராமல் ஒரு வங்கிக் கணக்கிற்குள் காசோலைகளை வைப்புச் செய்வதற்கான ஓர் மாற்றுவழி / இயந்திரம் இதுவாகும்.

4) விற்பனை நிலையங்களில் இலத்திரனியல் நிதி மாற்றலுக்கு வகை செய்யும் வலையமைப்பு முறை (Electronic funds transfer point of sales / EFTPOS)

இலத்திரனியல் அட்டைகள் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பொறிகள் இவையாகும். இங்கு இப்பொறிகளும் இவற்றினை வழங்கியுள்ள வங்கிகளும் வலையமைப்பின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

5) தொலைக்காட்சி வங்கி வசதிகள் (Television Banking)

கம்பித் தொலைக்காட்சியின் (Cable TV) விரிந்த வலையமைப்பின் அடிப்படையில் தொலைக்காட்சி மற்றும் தொலைக்காட்சியை இயக்கும் கருவிகளைப் பயன்படுத்தி வங்கிகளுடன் வாடிக்கையாளர் தொடர்புகளைப் பேணி சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் வசதி இதுவாகும்.

இதனூடாக வங்கியானது பின்வரும் சேவைகளை வழங்குகின்றது.

⇒ வங்கி மீதியை அறிதல் (Inquiry)

⇒ பட்டியல் கொடுப்பனவுகள் (Bill Payment)

தொகுப்பு :- திருமதி.சு.நிருபன் ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா தெற்கு.

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

6) தொலை வங்கி வசதிகள் (Tele Banking)

வாடிக்கையாளர் வங்கிக்குச் செல்லாது தனது தொலைபேசியைப் பயன்படுத்தி வணிக வங்கிக் கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதாகும்.

இவ்வசதி மூலம் வழங்கப்படுகின்ற சேவைகள்.

⇒ வங்கி மீதிகளை அறிதல்.

⇒ வட்டி வீதங்களை அறிதல்.

⇒ வேறு கணக்கிற்கு பணத்தினை பரிமாற்றம் செய்தல்.

⇒ காசோலைக்கு கொடுப்பனவு தடைவிதித்தல்.

⇒ வங்கிக் கூற்றிற்கு விண்ணப்பித்தல்.

இச் சேவையைப் பெறுவதற்கான நடைமுறை

⇒ வாடிக்கையாளர் இச்சேவைக்கு விண்ணப்பித்து ஓர் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

⇒ வங்கியினால் ஓர் இரகசிய குறியீடு வழங்கப்படும்.

⇒ இவ் இரகசிய குறியீட்டினை தெரிவித்து குறிப்பிட்ட வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒப்படை

1) ஆதிகாலத்திலிருந்து தற்காலம் வரை புழக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட பணத்தின் பட்டியல் ஒன்றினைத் தயாரிக்குக.

2) கபிலன் ரூ. 200 000 பெறுமதியான இயந்திரமொன்றினை ரவி என்பவருக்கு விற்பனை செய்தார். ரவி ரூ. 150 000 ஐ உடன் செலுத்தி மிகுதியை மூன்று (03) மாதத்தில் செலுத்துவதற்கு உடன்பட்டார். கபிலன் புதிய கடை ஒன்றினைக் கட்டுவதற்கு இப்பணத்தினை வங்கியில் வைப்புச் செய்தார். மூன்று மாத இறுதியில் ரவி குறிப்பிட்டவாறு முழுப்பணத்தினையும் செலுத்தினார். இந்நிகழ்ச்சிகளில் பணத்தினால் நிறைவேற்றப்பட்ட தொழிற்பாடுகளையும் சந்தர்ப்பங்களையும் விளக்குக.

3) இலங்கையில் கொடுக்கல் வாங்கல்களிற்காக பல்வேறு நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் அட்டைகளையும் அவற்றை வழங்கும் நிறுவனங்களையும் உள்ளடக்கி அட்டவணை ஒன்றினைத் தயாரிக்குக.

தொகுப்பு :- திருமதி.சு.நிருபன் ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்) - வலயக்கல்வி அலுவலகம் , வவுனியா தெற்கு.

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk